JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.100/2015 Date:16.02.2026 P.W. 2 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. ராஜசேகர் உதவி ஆய்வாளர், டி8 முத்தாபுதுபேட்டை காவல் நிலையம் |
| தந்தை பெயர் க/பெ | |
| முகவரி | |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 16th day of February 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது டி8 முத்தாபுதுபேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்ப பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் பணிமாறுதல் அடைந்து சென்று விட்டதால் அவரது கையொப்பம் எனக்கு பரிட்சியம் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.07.2013 ஆம் தேதி உதவி ஆய்வாளர் நிலைய அலுவலில் இருந்த போது சாட்சி மனோரஞ்சிதம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை குற்ற எண்.329/2013 சட்டப்பிரிவுகள் 392 இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். இவ்வழக்கில் சாட்சிகள் ஷோபா, சுப்பையா பேச்சியம்மாள், ராஜேஷ், பவாணி, விவேகானந்தன், வெங்கடேஷ், செங்கல்வராயன் ராயுடு, சுனிதா ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜேஷ் மற்றும் தீபன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரியை 25.12.2013 ஆம் தேதி டி11 திருநின்றவூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.1587/2013 என்ற வழக்கில் எதிரி செல்வம் என்பவரை கைது செய்த போது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சம்பந், சிவா ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் எதிரியை எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்தை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். எதிரியை இவ்வழக்கில் சம்பிரதாய

கைது மூலம் கைது செய்யப்பட்டு 26.12.2013 ஆம் தேதி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இவ்வழக்கில் முதலாம் எதிரி தலைமறைவாக இருப்பதால் அவ்வழக்கு பிரிக்கப்பட்டு தனியாக வழக்கு எண் வழங்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும் இவ்வழக்கை சாட்சி 1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தமிழ்மணி ESVEE மருத்துவமனை அவர்களை விசாரணை செய்து காயச்சான்று பெற்றார். அதன் பின்பு அனைத்து சாட்சிகளின் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3**, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.4**, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.5**, கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.6**, விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று **அ.த.சா.ஆ.7**.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். 16.07.2013 அன்று நிகழ்நிலை புகார்தாரர் மருத்துவமனையில் வைத்து புகார் அளித்தார் என்று சொன்னால் சரிதான். அன்றைய தினமே விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவயிடம் செல்லாமல் சாட்சிகளை விசாரணை செய்யாமல் ஆவணங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசரும் மாதிரி வரைபடமும் காவல் நிலையத்தில் வைத்து தான் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நிகழ்நிலை புகார்தாரர் புகாரில் வடமாநிலத்தவர் என்று தான் சொல்லியுள்ளார் என்றும் இரண்டாவது எதிரியை பற்றி எதுவும் கூறவில்லை என்றாலும், எதிரியை இந்த வழக்கில் சம்பிரதாய கைது செய்து யார் முன்னாலும் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை / இல்லை**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur